HDFC BANK
உங்கள் வீட்டு வங்கி

# HDFC BANK

நான்கு தசாப்தங்களாக பல்வேறு நிதித் தீர்வுகள் ஊடாக இலங்கை மக்களின் வீட்டு கனவை நிறைவேற்றுவதோடு வர்த்தக சமூகத்தினருக்கு நிதி உதவிகளை அளித்து நாட்டின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்துள்ள வங்கியுடன் உங்களின் வங்கியியல் தொழிலை உயர் நிலைக்கு கொண்டு செல்வதற்கான அரியதொரு வாய்ப்பு கிட்டியுள்ளது.

HDFC வங்கியில் கீழ் காணும் பதவிகளுக்கு திறமையான, செயல்திறன் மிக்க சாதகமான நோக்கை கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பிரிவுத் தலைவர் : கடன் மற்றும் மீள அறவிடல் பிரதிப் பொது முகாமையாளர் தரம்**
**HEAD OF CREDIT & RECOVERY** (DGM GRADE)

**பிரதான பொறுப்புகள்**

- முழுக் கடன் மற்றும் மீள அறவிடல், உறுதியான செயலாற்றுகை மற்றும் பாதீட்டு இலக்குகளை அடைதல் மற்றும் இதர நடவடிக்கைகளை முறைமைப்படுத்துவதற்கு உரிய மூலோபாய திட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளை தயாரித்தல்.
- வங்கியின் கொள்கைகளுக்கு அமைவாக கடன் அறவிடல் மற்றும் இடர் முகாமைத்துவத்தின் மூலம் தரமான கடன் பிரிவொன்றை உருவாக்குதல்
- கடன் மற்றும் அறவிடல் பிரிவின் பணியாள்தொகுதிக்கு உரிய பயிற்சியை வழங்குவதன் மூலம் அவர்களின் திறன் அபிவிருத்தி, நெறிமுறைகள், கொள்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் வழிகாட்டுதல்களுக்கு இசைவாக்கம் அடைவதை உறுதிப்படுத்துவதன் மூலம் வங்கியில் முறைசார்ந்த கடன் மற்றும் அறவிடல் கலாசாரமொன்றை உருவாக்குதல்.
- தற்பொழுது காணப்படும் கடன் மற்றும் அறவிடல் இடர் முகாமைத்துவக் கட்டமைப்பை மீளாய்வு செய்தல், குறைபாடுகளை அடையாளங் காணுதல் மற்றும் அறிக்கையிடல், அவற்றை தவிர்ப்பதற்கு உகந்த பரிந்துரைகளை சமர்ப்பித்தல், அவ்வாறான இடர்களை அடையாளங் காணுதல், மதிப்பீடு செய்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் பொருத்தமான தீர்வுகளை செயற்படுத்துவதன் மூலம் முழுமையான கடன் மற்றும் அறவிடல் இடர்களை வினைத்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்தல்
- அந்தந்த பிரிவுகளுக்கான சிறந்த பயன்பாடுகளை அடையாளங் காணுதல் மற்றும் மீளாய்வு செய்தல்
- இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்படுகின்ற நிர்வாக வரையறைக்கு ஏற்புடைய நிலைத்தன்மையினை உருவாக்குதல்

- அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் அடிப்படையில் ஏற்புடைய நெறிமுறைகள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் கடன் விருத்தியை முகாமைத்துவம் செய்தல்.
- கடன் மற்றும் அறவிடல் நடவடிக்கைகள் தொடர்பாக கிளையின் பணியாட்டொகுதிக்கு பயிற்சி அளித்தல்.
- சந்தை தேவைகளுக்கேற்ற வகையில் நிலவும் கடன் மாதிரிகளை உருவாக்குதல் மற்றும் புதிய மாதிரிகளை அபிவிருத்தி செய்வதற்கு வசதி அளித்தல்.
- கிளை வலையமைப்பினை உள்ளடக்கிய கடன் மற்றும் அறவிடல் பிரிவுக்கு தலைமையேற்றல், கூட்டாண்மை மூலோபாய நோக்குநிலை, கடன் மற்றும் அறவிடல் செயற்பாட்டு முகாமைத்துவத்துக்கு ஒத்துழைப்பு அளிக்கும் இலக்குகளை உருவாக்குதல்

**தேவையான தகைமைகள்**

- வர்த்தக முகாமைத்துவம், நிதியியல், கணக்கீடு, சட்டம், சந்தைப்படுத்தல், பொருளியல் அல்லது இதர ஏற்புடைய துறை சார்ந்ததாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது பூரண தொழில் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
- கடன் முகாமைத்துவம், வர்த்தக முகாமைத்துவம், நிதியியல், சந்தைப்படுத்தல், வங்கியியல் அல்லது இதர ஏற்புடைய ஏதேனுமொரு துறை சார்ந்ததாக முதுகலை பட்டம் பெற்றிருத்தல் மேலதிக தகைமை ஆகும்.
- கடன் மற்றும் அறவிடல் பிரிவுகளை உள்வாங்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் அல்லது நிதி நிறுவனமொன்றில் சேவையாற்றி 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவத்தை பெற்றிருப்பதோடு சிரேஷ்ட முகாமையாளர் பதவியில் 8 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தை கொண்டிருத்தல்.

**வயதெல்லை** - 45 **வயதிற்கு கீழே விரும்பத்தக்கது**.

## கம்பனிச் செயலாளர்
COMPANY SECRETARY

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளின் அனுபவத்தின் பிரகாரம் அவர்களை உதவிப் பொது முகாமையாளர் அல்லது பிரதான முகாமையாளர் பதவியில் அமர்த்தும் உரித்து வங்கிக்கு உண்டு.

**பிரதான பொறுப்புகள்**

- ஒவ்வொரு நிதி ஆண்டுக்குமுரிய பணிப்பாளர் சபை கூட்ட நாட்காட்டிகளை தயாரித்தல், ஒழுங்குபத்திரங்களை தயாரித்தல், தேவையான பத்திரங்களை தயாரித்தல் மற்றும் அவற்றை பணிப்பாளர் சபை இணையதளத்தில் வெளியிடுதல், கூட்ட அறிக்கைகளை தயாரித்தல், பணிப்பாளர் சபை தீர்மானங்களை உரிய நேரத்தில் ஏற்புடைய தரப்புகளுக்கு அறிவித்தல் மற்றும் அவை தொடர்பாக பின்னாய்வு செய்தல், பணிப்பாளர் சபை மற்றும் சபை துணைக் குழு கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல், அவற்றுக்கிடையே எழக்கூடிய

யாதேனும் விடயங்கள் மற்றும் யோசனைகள் தொடர்பாக பின்னாய்வு செய்தல் மற்றும் குழு அறிக்கைகளை உரியவாறு பேணுதல்.

- ஒழுங்குபடுத்தல் இசைவாக்கக் கட்டமைப்புகளின் பிரகாரம் சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ளவாறு வருடாந்தப் பொதுக் கூட்டங்கள் மற்றும் விஷேட பொதுக் கூட்டங்களுக்கு ஏற்புடைய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்தல்.
- இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பங்குச் சந்தை மற்றும் இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு போன்ற ஓழுங்குபடுத்தல் நிறுவனங்கள் அறிமுகப்படுத்தியுள்ள ஒழுங்குவிதிகளுக்கேற்ற வகையில் வருடாந்த அறிக்கையில் வெளியிடுவதற்கு தேவையான அறிக்கைகளை தயாரித்தல்.
- பங்குச் சந்தை ஒழுங்குவிதிகள், வங்கியியல் சட்டம், கூட்டு நிறுவன நிர்வாக வழியாட்டுதல்கள் மற்றும் துறை சார்ந்த இதர சட்ட ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டதாக பயன்மிக்கதும் வினைத்திறன்மிக்கதுமான கம்பனிச் செயலாளர் பதவிக்கு ஏற்புடைய பணிகளை நிறைவேற்றுதல்
- பங்குகள் பரிமாற்றத்துக்கு உரிய நிறுவனம் சார்ந்த வெளிப்படுத்தல்கள் மற்றும் பங்குதாரர்களின் தேவைகளை நிறைவேற்றுதல்
- இலங்கை மத்திய வங்கி, கொழும்பு பங்குச் சநதை, இலங்கை பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழு நிறுவனம் சார்ந்த நிர்வாக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் ஏற்புடைய அமைச்சுகள் அறிமுகப்படுத்தியுள்ள ஒழுங்குபடுத்தல் தேவைகளை வழங்குவதற்கு ஏற்புடைய தரப்புகளுடன் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்படுதல்.
- சட்டங்களினால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு ஏற்புடைய கோப்புகள், பதிவு செய்தல் நடவடிக்கைகள், அறிக்கை ஏடுகள் மற்றும் பங்குதாரர்களின் விபரங்கள் அடங்கிய பத்திரங்கள் போன்றவற்றை முறையாக பேணுதல்.
- ஏற்புடைய சட்ட ஏற்பாடுகளில் இடம்பெறும் மாற்றங்கள் தொடர்பாக விழிப்புடன் இருத்தல், அவற்றை மீளாய்வு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், அவ்வாறான விடயங்கள் தொடர்பாக பொருத்தத்தேற்றவாறு அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை தயாரித்தல்
- பணிப்பாளர் சபை மற்றும் சபையின் துணைக் குழுக்கள் சிறப்பு/ பொதுக்கூட்டங்களின் அறிக்கைகளை பேணுதல், மேற்படி அறிக்கைகளை உரிய காலப்பகுதிக்குள் கூட்டு நிறுவன மற்றும் இதர ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் மற்றும் வங்கிக்கு ஏற்புடைய இதர பல்வேறு அரச செயற்பாடுகளை மேற்கொள்வதோடு, கம்பனிச் செயலாளர் வங்கி சார்பாக நிர்வாகச் செயற்பாடுகளை மேற்கொள்வதோடு வங்கி சார்பான பத்திரங்களுக்கு ஏற்புடைய நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**தகைமைகள்**

- பட்டயச் செயலாளர் மற்றும்/ அல்லது
- சட்டத்தரணி
- கம்பனிச் செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கம்பனிச் செயலாளர்

- பிரதான முகாமையாளர் தரத்திற்கு – வங்கியொன்றிலோ அல்லது இதர அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றிலோ முகாமையாளர் பதவியொன்ளறில் குறைந்த பட்சம் 10 ஆண்டு கால அனுபவம் மற்றும் முதுகலை பட்டம் அல்லது அதற்கு ஒத்த இதர தகைமையினை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- சிரேஷ்ட முகாமையாளர் தரத்திற்கு - வங்கியொன்றிலோ அல்லது இதர அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றிலோ முகாமையாளர் பதவியொன்றில் குறைந்த பட்சம் 05 ஆண்டு கால அனுபவம் உள்ளிட்ட 07 ஆண்டு கால அனுபவத்தோடு ஏற்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு தகைமையினை பெற்றிருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்.
- SEC, CSE ஒழுங்குவிதிகள், வங்கியியல் சட்டம் மற்றும் ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களுக்கு ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான முறையான புரிதல் இருத்தல் வேண்டும்.
- செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**வயதெல்லை : 55 வயதுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.**

**கவர்ச்சிகரமான ஊதியங்களும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.**

**விண்ணப்பிக்கும் செயன்முறை**

மின்னஞ்சலின் விடய வரிசையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 07.02.2024 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் careers@hdfc.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவத்தை கொண்டிராத நபர்களுக்கு இந்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

ஏற்புடைய தகைமைகளை பூர்த்தி செய்யாத நபர்களின் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைத்த விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் போது ஏற்புடைய கோப்புகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் எக் காரணத்தினாலும் மேற்படி பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

எந்தவொரு அழுத்தம் பிரயோகித்தலும் இப் பதவிக்கான தகைமை இழப்பாக கருதப்படும்.

ஆட்சேர்ப்புகளை பிற்போடுவதற்கான  அல்லது ரத்துச் செய்வதற்கான உரிமை HDFC வங்கிக்கு உண்டு. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆட்சேர்ப்பு செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு அழைக்கப்படுவார்கள்.

**உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்**

HDFC **வங்கி,**

**த.பெ. இல** 2085,

**சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**

**கொழும்பு** 02

**தொலைபேசி இல** - 0112 356800 - **இணைய தள முகவரி** : www.hdfc.lk